# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 06 செவ்வாய்க்கிழமை 18.02.2025 கதிர் 131







# உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதியைப் பிற்போடுங்கள்

## தேர்தல் ஆணைக்குழுவிடம் சஜித் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 18

**வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் அதாவது எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்தனர். இதன் பிற்பாடு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.**




அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“உள்ளூராட்சி சபைத் தேர்தல் பல வருடங்களாக ஒத்திவைக்கப்பட்ட போது, ஐக்கிய மக்கள் சக்தி, நீதிமன்றத்துக்குச் சென்று தேர்தலை நடத்த வேண்டும் என்ற நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது.

பிரச்சினையான சூழ்நிலை காரணமாகப் பழைய வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டு, புதிய வேட்புமனு கோரப்பட வேண்டும் என்று அனைவரும் முன்வந்து இதனை ஆதரித்தனர்.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 66 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது வரவு - செலவுத் திட்டத்தின் மீது இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 25 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்பிறகு, குழு நிலை விவாதம் நடக்கும். சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்காலப்பிரில் சட்டவாக்கப் பணிகளைச் செய்ய உறுதி பூண்டுள்ளனர். சபையில் மட்டுமன்றி பல்வேறு குழுக்களும் காணப்படுகின்றன.

இந்த வரவு - செலவுத் திட்ட காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டவாக்க நடைமுறையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கி, எதிர்வரும் மார்ச் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் வேலைத்திட்டத்தை 7 ➤

## வடக்கு மாகாணத்துக்குப் பெருமளவு நிதி ஜனாதிபதிக்கு ஆளுநர் நன்றி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 18

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாக்குறுதியளித்தவாறு வடக்கு மாகாணத்துக்குப் பல்வேறு திட்டங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கியுள்ளார். அவருக்கு எமது வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்ட மீளாய்வு கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே ஆளுநர் 7 ➤

## அரியாலை விபத்தில் ஆண் ஒருவர் மரணம்



யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை மாம்பழம் சந்தியில் இன்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.


யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மேற்படி நபரின் சைக்கிள் மீது, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் 7 ➤

## பாணின் விலை 10 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, பெப். 18

கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்குக் பேக்கரி உரிமையாளர்கள் இணங்கியுள்ளனர் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கு பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் நேற்று தீர்மானித்திருந்தன. 7 ➤



## ஆறு துப்பாக்கிகளுடன் இருவர் சிக்கினார்கள்!

அநுராதபுரம், பெப். 18

ஆறு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், கிரானேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோரளயாகம மற்றும் உல்ப-த்தயாய ஆகிய பகுதிகளில் நேற்று 7 ➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சிங்கள தோட்ட அதிகாரியின் மோசமான செயல்

கொழும்பு , பெப். 18

சிங்கள தோட்ட அதிகாரியால், தமிழ் இளைஞர் ஒருவர் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டு நாய்களை விட்டு துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். இதனை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,'' வட்டவல பெருந்தோட்டத்துக்குரிய உடுகம ஹோமாதொல தோட்டத்தில் காபில் பிரிவில் சேவையாற்றும் காமினி கிங்ஸ்லி என்ற தோட்ட அதிகாரி மனிதாபிமானமற்ற வகையில் அத்தோட்ட பகுதியில் லயன் அறையில்வாழும்தமிழ்இளைஞர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

தமிழ் இளைஞர் தோட்ட அதிகாரியால் மனிதாபிமானமற்ற முறையில்தாக்கப்பட்டுநாய்களை விட்டு துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். இதனை எம்மால் பார்த்துக்கொண்டிக்க முடியாது.



தமிழ் இளைஞன் சிங்கள அதிகாரியை இவ்வாறு தாக்கியிருந்தால் கலவரம் தோற்றம் பெற்றிருக்கும். ஆகவே முறையாக விசாரணை செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்.

இந்த சம்பவம் தொடர்பான காணொளிசமூகவலைத்தளங்களில் பகிரப்படுகிறது .இதனை இனவாத வைரஸ்என்றே குறிப்பிட வேண்டும். தமிழ் இளைஞனை நிலத்தில் வீழ்த்தி, நாய்களை கடிப்பதற்கு ஏவி விடுகிறார்கள்.

ஒரு தரப்பினர் சுற்றியிருந்து வேடிக்கை பார்க்கிறார்கள். பிரச்சினை என்னவென்று தெரியாது, யார் தவறிழைத்தார்கள் என்பதும் தெரியாது. இதனை பொலிஸார் பார்க்க வேண்டும்.



ஒரு இளைஞனை நிலத்தில் தள்ளி நாய்களை கடிப்பதற்கு ஏவி விடுவது முற்றிலும் தவறு. இதனை என்னால் பார்க்க முடியவில்லை.

ஹோமாதொல தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை செய்து நீதிமன்றத்துக்கு குற்றவாளிகளை முன்னிலைப்படுத்துங்கள்.

இந்த சம்பவம் தொடர்பான காணொளியை பார்த்து எனது மனைவி கண்ணீர் விட்டு அழுதார்.

நிலத்தில் தள்ளப்பட்டது தமிழ் இளைஞன், அவரை தள்ளிட்ட கிங்ஸ்லி என்பர் சிங்களவர் இருவரும் இலங்கையர்கள். இந்த சம்பவம் மாறி நடந்திருந்தால் கலவரம் தோற்றம் பெற்றிருக்கும். ஆகவே இச்சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து பாருங்கள்.

அரசாங்கத்தை நான் குறை சொல்லவில்லை. தோட்ட நிர்வாகங்களில் முறையற்ற வன்மமான செயலை குறிப்பிடுகிறேன். ஜனாதிபதி தனது உரையில் மலையகம் என்ற சொல்லை பயன்படுத்தினார். நான் அதற்கு ஜனாதிபதியிடம் நன்றி தெரிவித்தேன்.

தெற்கில் வாழும் பெருந்தோட்ட மக்களுக்கு தான் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை தெற்கு பகுதியில் பெண்களை அவமானத்துக்கு உட்படுத்தும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இதனை தேடிப்பாருங்கள்.

தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. மார்ச் 21 ஆம் திகதி வரை விவாதம் நடைபெறும். நாங்களே விவாதத்தை கோரியுள்ளோம். விவாதத்தை நடத்த வேண்டிய தேவை ஆளும் தரப்புக்கு கிடையாது.

வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு மத்தியில் தேர்தல் பிரச்சாரங்களை நடத்துவது அனைவருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும், இவ்விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்த வேண்டும்.'' என கூறியுள்ளார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்திய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# வரலாற்றில் கல்விக்காக அதிக தொகையை ஒதுக்கிய பட்ஜெட்



கொழும்பு , பெப். 18

நாட்டில் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், வரலாற்றில் முதன்முறையாக கல்விக்கு என்று அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

▸ முன்பள்ளி சிறார்களின் போசனையை அதிகரிக்க, காலை உணவு வழங்குவதற்காக ஒரு வேலை உணவுக்கு வழங்கப்படும் 60 ரூபாவினை 100 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டது. அதற்காக 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பகால சிறு பராய அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்திக்காக ரூ.80 மில்லியன் ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

▸ முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகளுக்காக தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை 1000 ரூபாவினால் அதிகரிக்க 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ பாடசாலை உட்கட்டமைப்பை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாயும் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக 135 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் முன்மொழியப்பட்டது.

▸ தற்போதுள்ள பாடசாலை முறைமையை மீளாய்வு செய்து தேசிய திட்டமொன்றை தயாரிப்பதற்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை 750 ரூபாயில் இருந்து 1500 ரூபா வரையில் அதிகரிக்க 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ விளையாட்டுத் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு மேலதிக உணவு உதவித்தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தவும், தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவித்தொகையை 4,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக அதிகரிக்கவும் ரூ. 200 மில்லியன் ரூபா முன்மொழியப்பட்டது.

▸ பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உதவித்தொகையை ரூபா 5,000 இலிருந்து ரூபா 7,500 ஆக அதிகரிக்கவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாணவர் உதவித் தொகையை ரூபா 4,000 இலிருந்து ரூபா 6,500 ஆக அதிகரிக்கவும் 4,600 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ உயர்தர பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்காக திறமையானவர்களுக்கு வெளிநாடுகளில் கல்வி கற்கத் தேவையான ஏற்பாடுகளை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க 200 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள நூலகங்களை மேம்படுத்த 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

▸ ஐந்து மாகாணங்களில் விசேட விளையாட்டுப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு முன்மொழியப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதிக்கு ஹர்ச அதிரடி பதில்



கொழும்பு , பெப். 18

“மக்கள் கோருவதைக் கொடுக்க முடியாத அரசாங்கம் எப்படித் தான் விரும்புவதைக் கொடுக்க முடியும்?” என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷா டி சில்வா நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தை, செவ்வாய்க்கிழமை (18) ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

மறுமலர்ச்சி அரசாங்கத்தின் முதல் பட்ஜெட்டை ஜனாதிபதி தாக்கல் செய்தார். ஆறு மாத பட்ஜெட்டை தாக்கல் செய்யும் போது, எனக்கும் ஒரு சிறிய வாய்ப்பு வழங்கப்பட்டது. பரவாயில்லை நண்பரே. ஜேவிபி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது, எனவே நான் கேட்பதை அவர்களால் எனக்கு வழங்க முடியாது.

முதலில், அவரது தலைமையின் கீழ் மூன்று எம்.பி.க்களிலிருந்து 159 எம்.பி.க்களாக வளர்ந்ததற்காக கட்சியை நான் வாழ்த்த விரும்புகிறேன். மூன்றில் இரண்டு பேர் இருப்பதால், எந்தவொரு நாட்டினரின் அரசாங்கத்தையும் ஏற்றுக்கொள்ளும் திறன் அரசாங்கத்திற்கு உள்ளது என்று ஹர்ஷா டி சில்வா கூறினார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, நாடாளுமன்றத்தில் தற்போது 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலுத்திட்டத்தை திங்கட்கிழமை (17) சமர்ப்பித்துக்கொண்டிருக்கின்றார். அப்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ ஏதோ கூறினார்.

கேள்வியெழுப்பிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, என்ன ஹர்ஷ, நீங்கள் கேட்பதை நான் எப்படி கொடுப்பது.

உங்களுக்கு எப்பது கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியை கொடுப்பது என ஜனாதிபதி கேட்டார். இதன்போது அவையில் இருந்த ஆளும் தரப்பினர் கெக் என சிரித்துவிட்டனர். (ஐ)

# “வாகன இறக்குமதி மிகவும் ஆபத்தானது”



கொழும்பு , பெப். 18

வாகனங்களின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளதால், வாகன இறக்குமதி மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்று ஐக்கிய ஜனதா தள நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

நாட்டின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தைத் ஆரம்பித்து வைத்துப் பேசிய போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசியதாவது, ஜனாதிபதி தனது வரவு-செலவுத் திட்ட உரையில் பெரும்பாலான வரி வருவாயை வாகன இறக்குமதியிலிருந்து எதிர்பார்க்கப்படுவதாகக் கூறியதாக தெரிவித்தார். வாகனங்களின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

புதிய விலைகளின் படி, டொயோட்டா ரேய்ஸ் போன்ற வாகனங்கள் ரூ.12.2 மில்லியன், டொயோட்டா யாரிஸ் ரூ.18.5 மில்லியன் மற்றும் ஒரு ப்ரியஸ் ரூ.28.9 மில்லியன் ஆகும்.

வாகன இறக்குமதி மிகவும் ஆபத்தானது. இந்த விகிதத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய யாரால் முடியும்? தற்போதைய விகிதத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய வசதி படைத்தவர்கள் இருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்” என்று அவர் கூறியுள்ளார். (ஐ)

# பச்சை மிளகாயின் உச்ச விலை



கொழும்பு , பெப். 18

அண்மைக்காலமாக பச்சை மிளகாயின் விலை விஷம் போல் ஏறி வருகிறது . கல்முனை பிரதான சந்தையில் ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாயின் விலை 2,000 ரூபாவிற்கு செவ்வாய்க்கிழமை (19) விற்கப்பட்டது.

சந்தையில் இந்த விலை என்றால் கிராமங்களில் உள்ள சில்லறை கடைகளில் நிலைமை வேறு. கிலோ கிராம் 2,400 ரூபாய் வரைக்கும் விற்கப்படுகிறது.

அதேவேளை, ஏனைய மரக்கறிகளின் விலைகளும் என்று மில்லாதவாறு அதிகரித்து வருகின்றன.

பிரதான சந்தையில், திங்கடகிழமை சில மரக்கறிகளின் ஒரு கிலோகிராம் விலைகள் இவை.

மிளகாய் -2,000
பெ.வெங்காயம்-240 ரூபாய்
சி.வெங்காயம்-400 ரூபாய்
உ.கிழங்கு(வெ)-250 ரூபாய்
உ.கிழங்கு (சி)(நூரளை)-550 ரூபாய்
லீக்ஸ்-700 ரூபாய்
கரட் (நூரளை)-1,000 ரூபாய்
கரட் - 900 ரூபாய்
தக்காளி - 200 ரூபாய்
கோவா- 700 ரூபாய்
இஞ்சி -2,000 ரூபாய்
வெ.பூண்டு- 700 ரூபாய்
போஞ்சி-300 ரூபாய்
தேசிக்காய்-150 ரூபாய்
பீட்ரூட்-600 ரூபாய்
சுரைக்காய் -200 ரூபாய்
கத்தரிக்காய்- 800 ரூபாய்
வெண்டைக்காய்-600 ரூபாய்
பயற்றங்காய் - 600 ரூபாய்
பழப்புளி- 1,400 ரூபாய்

இவ்வாறு பரவலாக விலைகள் உயர்ந்து கொண்டே வருகிறது. இதனால் மக்கள் திருப்தியாக உண்டு வாழ்வதற்கு முடியாமல் திண்டாடுகின்றனர். (ஐ)

# ”குரங்குகளைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்காதீர்கள்”

கொழும்பு , பெப். 18

சமீபத்திய மின் தடைக்கான காரணத்தைக் கண்டறிய அரசாங்கம் இன்னும் விசாரணைகளை நடத்தி வருவதாக அரசாங்கத்தின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

“குரங்குகளைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்காதீர்கள். மின்வெட்டுக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய நாங்கள் இன்னும் விசாரணைகளை நடத்தி வருகிறோம்,” என்று ஜெயதிஸ்ஸ கூறினார், அதே நேரத்தில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் இந்த வாரத்திற்குள் பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து ஒரு அறிக்கையை வெளியிடுவார் என்று உறுதியளித்தார்.

இன்று சபையில் நிலையியற் கட்டளைகள் 27 (2) இன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றை அவர் குறிப்பிட்டு இவ்வாறு கூறினார். (ஐ)



# அவதூறு வழக்குக்காக நீதிமன்றத்தில் சீமான் ஆஜர்

அவதூறு வழக்கு விசாரணைக்காக விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று ஆஜரானார். முன்னதாக, கடந்த 2019இல் விக்கிரவாண்டி சட்டசபை உறுப்பினராக இருந்த ராதாமணி இறந்ததை தொடர்ந்து விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

அந்த இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பிரகலதாவை ஆதரித்து கஞ்சனூர் காவல் நிலைய எல்லைலக்குட்பட்ட நேமூர் கிராமத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார். அப்போது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை சம்பவம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக சீமான் மீது காங்கிரஸ் கட்சியின் விழுப்புரம் மாவட்ட தலைவர் ரமேஷ் விக்கிரவாண்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு இன்று விக்கிரவாண்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணைக்காக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேரில் ஆஜரானார்.



# குடியரசு தலைவரை சந்தித்த கத்தார் அமீர்

கத்தார் நாட்டின் அமீர் (தலைவர்) ஷேக் தமீம் பின் ஹமாத் அல் தானி, இரண்டு நாள் பயணமாக நேற்று மாலை விமானம் மூலம் இந்தியா வந்தார். அவரை பிரதமர் மோடி விமான நிலையத்துக்கே சென்று வரவேற்றார்.

இது மிகவும் அரிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது. கத்தார் அமீர், இன்று குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்தார். இதற்காக குடியரசு தலைவர் மாளிகைக்கு வந்த அமீரை திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி வரவேற்றனர்.

குடியரசு தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்துள்ள நிலையில், கத்தார் அமீர் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார். பிரதமர் மோடி அழைப்பின் பேரில் இந்தியா வந்துள்ள கத்தார் அமீர் முன்னதாக 2015ஆம் ஆண்டு மார்ச் மாதவாக்கில் இந்தியா வந்திருந்தார்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை ஆசிரியர் கைது



குஜராத் மாநிலம் சபர்கந்தா பகுதியில் ஒரு அரசு பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்து வரும் மாணவியை அந்த பள்ளியில் பணியாற்றும் 33 வயது ஆசிரியர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அந்த மாணவி கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற குடியரசு தின நிகழ்ச்சியில் பேசியபோது, பெண் குழந்தையை காப்பாற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதன் முக்கியத்துவம் குறித்து உரையாற்றி இருந்தார். அவரது பேச்சை பலரும் பாராட்டியதால் அந்த மாணவி பிரபலமானார்.

இந்நிலையில் கடந்த 7ஆம் திகதி பள்ளி யில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் தனது பிறந்த நாளை கொண்டாடுவதாக கூறி மாணவியை ஒரு தனியார் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். தனது நண்பர் விருந்து கொடுப்பதாகவும், எனவே இதனை யாரிடமும் கூற வேண்டாம் என அந்த மாணவியிடம் கூறி ஓட்டலுக்கு அழைத்து சென்ற அவர் அங்கு மாணவியிடம் அத்துமீறியுள்ளார்.

இதனால் மாணவி அதிர்ச்சி அடைந்து சத்தம் போட்ட நிலையில் உன்னை தேர்வில் தோல்வி அடையச் செய்துவிடுவேன் என மிரட்டி பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில், ஆசிரியர் மீதும், குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாக ஆசிரியரின் நண்பர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய சந்தையில் நுழையும் டெஸ்லா!




பில்லியனர் எலோன் மஸ்க்கின் மின்சார வாகன (EV) நிறுவனமான டெஸ்லா இன்க் இந்திய சந்தையில் நுழையும் திட்டங்களை நேற்று (17) சுட்டிக்காட்டியுள்ளது.

இது மிகவும்எதிர்பார்க்கப்பட்ட இந்திய சந்தை நுழைவுக்கான முக்கிய மைல்கல்லாகும்.

கடந்த வாரம் வொஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன், அதையடுத்து பில்லியனர் எலோன் மஸ்க்குடனும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட சந்திப்பின் பின்னர் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

டெஸ்லா தற்சமயம் இந்தியாவில் பல்வேறு துறைகளில் 13 பதவிகளுக்கான காலியிடங்களை அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்எதிர்கொள்ளும்பாத்திரங்கள் மற்றும் பின்தள செயல்பாடுகள் இரண்டிலும் கவனம் செலுத்துகிறது.

ஆட்சேர்ப்பு இயக்கம் முக்கிய பெருநகரங்களில் கவனம் செலுத்தியுள்ளது.

டெல்லி மற்றும் மும்பைக்கு தலா ஐந்து வெற்றிடங்களை வழங்குகிறது.

ஆட்சேர்ப்புக்கு அப்பால், முக்கிய நகர்ப்புற மையங்களில்ஷோரூம்கள்உள்ளிட்ட இடங்களை டெஸ்லா தீவிரமாக தேடி வருகிறது.

டெஸ்லா முக்கிய இடங்களைப் பாதுகாக்க முக்கிய ரியல் எஸ்டேட் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி வருவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.



# "பெண்" என்று எழுது!

## இந்திய அரசியலும் பெண்களும்

அரசியல் அதிகாரம் கையிலிருக்கும் காரணத்தால் குழந்தைப்பேறு, கருக்கலைப்பு, சானிடர் நாப்கின்கள் மீதான வரி என்று பெண்களை நேரடியாகப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளில்கூட சம்பந்தமில்லாமல் ஆண்கள் கருத்துகளை அள்ளித் தெளிக்கிறார்கள், விபரீத முடிவுகளையும் எடுக்கிறார்கள்.

அடிப்படைப் பொது அறிவுகூட இல்லாமல், எதைப் பற்றியும் மிதமிஞ்சிய செருக்குடன் உளறிக்கொட்டுகிறவர்களுக்கு அரசியலில் நுழைய இல்லாத தயக்கம் பெண்களுக்கு மட்டும் ஏனோ சாபம் போல் கவிந்து கிடக்கிறது. ஆனால், சரியோ தவறோ, மனதில் பட்டதைப் பேசும் பெண்களைச் குடும்பமும் சமூகமும் அவ்வளவு தூரம் விரும்புவதில்லை என்பதால்தான் பெண்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கும் முன் ஒன்றுக்கு பலமுறை யோசிக்கவேண்டி இருக்கிறது் தயக்கமும் தோன்றுகிறது.

அதையும் மீறித் துணிச்சலோடு பொதுவாழ்வில் ஈடுபடும் எந்தப் பெண்ணுமே தன் தகுதியை எப்போதும் நிரூபித்துக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது. வெற்றி பெற ஓர் ஆண் போராடுவதைவிடவும் போட்டியில் இடம் பெறுவதற்கே பெண் அதிகமாகப் போராட வேண்டி இருக்கிறது..

புறவெளி முழுதும் 'ஆண்மய'மாகவும் சமூகம் மொத்தமும் 'ஆண்மைய'மாகவும் இருப்பதனால், பெண் ஆளுமைகளின் முழுவீச்சினை இந்தப் பிரபஞ்சம் இன்னும் முழுமையாக உணராமலே கிடக்கிறது. ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் பல்சுவைப் பாத்திரங்களில் நடித்த மனோரமாவைப் பாராட்டும்போதும் 'பொம்பள சிவாஜி' என்று குறிப்பிடும் அவலம்தானே நீடிக்கிறது?

இந்தியாவில் மொத்தம் 550 லட்சம் பெண்கள் ஆண் துணையின்றி பிள்ளைகளை வளர்ப்பதாக ஐ.நா கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இவை தவிர கணவன் உடன் இருந்தாலுமே பிள்ளை வளர்ப்பு, குடும்பப் பொறுப்பு, பொருளாதாரப் பொறுப்பு என்று இரட்டைச் சுமைகளைச் சுமக்கும் பெண்களுக்கு இல்லாத அப்படி என்ன தகுதி ஆணுக்கு இருப்பதால் வீரம், துணிச்சல், முடிவுகள் எடுக்கும் திறன் இவையெல்லாம் 'ஆண்மை' என்று சமூகம் நம்புகிறது என்று நாம் சிந்திக்க வேண்டும்.

உலகெங்கிலும் அரசியலில் காலங்காலமாகப் பெண்கள் இயங்கி வந்திருக்கிறார்கள். அரசியல் ரீதியாக பெரும் புரட்சிகளுக்குப் பெண்களின் அரசியல் தலையீடும் போராட்டங்களும் வித்திட்டுள்ளன. இந்தியாவின் விடுதலைப் போராட்டத் தில் பெண்களின் பங்கு அளப்பரியது.

சோவியத் ரஷ்யாவில் 1917 இல் வாக்குரிமை கோரி பெண்கள் நடத்திய பெரும் போராட்டத்தின் விளைவாக மார்ச் 8 விடுமுறை நாளாகப் பல நாடுகளில் அறிவிக்கப்பட்டது. பின்பு அமெரிக்காவில் தொழிற்சாலைகளில் பெண்கள் எட்டு மணிநேரம் வேலை, நியாயமான ஊதியம் உள்ளிட்ட தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த பெண்களைக் கௌரவப்படுத்தும் முயற்சியாகவே பெண்கள் தினம் வழக்கத்துக்கு வந்தது.

இந்த உண்மை பொதுக்கவனத்துக்கு வந்தால் நம் பெண்கள் 'தாயாக, சகோதரியாக மகளாக' என்று பெண்ணடிமைத்தனத்தை நயவஞ்சகமாகத் திணிக்கும் புகழுரைகளில் மயங்குவார்களா? கார்ப்பரெட் சந்தையின் வியாபாரம்தான் ஜரூராக நடக்குமா? ஆகவேதான் ஆண் மைய, ஏகாதிபத்திய அதிகாரம் திட்டமிட்டும், கைவந்த கலையாகவும் பெண்களுக்கான இடத்தை எப்போதும் அரசியலில் வழங்க மறுக்கிறது் ஒடுக்குகிறது.

அரசியல் தலைவர்கள், அறிஞர்கள் என்று எந்த வகைமையிலும் குழந்தைகளின் பாடப்புத்தகங்கள்கூட முழுக்க முழுக்க ஆண்கள் படங்களையே காண்பிக்கின்றன. 'பெண் தலைவர்கள்' என்று ஒதுக்கப்பட்ட தலைப்பில் மட்டும்தான் நாம் சரோஜினி நாயுடு, ஜான்சி ராணி என்று நான்கு பேரைப் பார்க்க முடிகிறது. நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33% ஒதுக்கீட்டுக்கு இன்னும் போராடிக் கொண்டு இருக்கும் நிலையில் அரசியலில் பெண்கள் என்றால் பொது மனசாட்சிக்கு உடனே நினைவுக்கு வருவது யார்?

விடுதலைப் போராட்டத்தில் கணவனுடன் தோளோடு தோளாக நின்ற கஸ்தூரிபாயா? ஆயுதமேந்திப் போரிட்ட கல்பனா தத்தாவா? பஞ்சாயத்துத் தலைவரானதால் துள்ளத் துடிக்க காதும் கைவிரல்களும் வெட்டப்பட்ட கிருஷ்ணவேணியா? தலித் என்பதால் கொடியேற்ற உரிமை மறுக்கப்பட்டு அதைப் போராடிப் பெற்றாரே திருமதி அமிர்தம் அவர்களா?

குடிநீர் விநியோகத்திலும் நியாய விலைக்கடைகளிலும் ஊழலை ஒழித்த சிபிஎம் கவுன்சிலர் தோழர் லீலாவதி பச்சைப் படுகொலை செய்யப்பட்டது, அரசியல் அறத்துடன் செயற்படும் பெண்களை அச்சமூட்டி அடக்கி வைக்கும் செயல் மட்டுமல்ல அது மக்கள்விரோத அரசியல் சக்திகளைத் தட்டிக்கேட்ட போராளியின்மீது நடத்தப்பட்ட மூர்க்கமான தாக்குதல். வில்லாபுரத்தில் குடிநீர்க்குழாய்கள் வந்த போது அப்பகுதிப் பெண்கள் குடங்குடமாகக் குடிநீரைக் கொண்டு போய் தோழர் லீலாவதியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியது நினைவிருக்கலாம். இன்றளவும் பெண்கள் தலைவர்களாக இருக்கும் நாடுகளில்தான் கொரோனா அதிக அளவில் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது.

தற்கால அரசியலில் எத்தனையோ வீரியமான பெண்கள் இருந்தாலும்கூட, பொதுப்புத்தியில் யார் லட்சியப் பெண்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள் என்பதில் எப்போதும் சிக்கல் இருக்கிறது. ஊழலில் ஏ1 குற்றவாளியான மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவை வரலாற்று நாயகியாகச் சித்தரித்து திரைப்படம் வருகிறது. பெண் என்பதாலேயே அவரது அரசியல் நிலைப்பாடும் செயற்பாடுகளும் பெண்கள் முன்னேற்றத்துக்கு வழிவகுத்ததா என்ற கேள்வி நம் முன் நிற்கிறது.

பொருளாதாரத்தைப் படுகுழியில் தள்ளியிருக்கும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெங்காயம் விலை விஷம் போல ஏறுகிறதே என்று நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "எங்கள் வீட்டில் வெங்காயம் பயன்படுத்திச் சமைப்பதில்லை அதனால் அதைப் பற்றிக் கேட்காதீர்கள்" என்று பதிலளித்தாரே.

அவரை எப்படி அனைத்துப் பெண்களுக்கும் பிரதிநிதியாகக் கொள்ள முடியும்? மதப்பற்றின் கைப்பாவையாக, சூரி யனுக்குப் பல் இல்லாததால் பதமாக உளுந்து வடை சுட்டாரே ஒழிய ஒக்கிப் புயலில் சிக்கிய மீனவர்கள் மீதும் கண்ணீரில் மிதந்த பெண்கள் மீதும் எவ்வளவு கரிசனம் காட்டினார் என்பதை நாடறியும்.

ஆகவே, ஆதிக்க சக்திகளைத் துணையாகக் கொண்டு அவை கட்டமைக்கும் பிம்பத்துக்குச் சரியாகப் பொருந்திப் போகிறவர்களும் ஆண்வழியிலேயே (சாதி மற்றும் பொருளாதார ஆதிக்கம்) கைப்பற்றும் பெண்களும் மட்டுமே விதந்தோதப்படுகிறார்கள். அரசியல் குடும்பங்களிலும்கூட ஆண் வாரிசுகளை விடத்திறமையும் தகுதியும் இருந்தாலும் பெண்களுக்கு இரண்டாம் இடம் தான் கொடுக்கப்படுகிறது என்பது வேதனை.

சித்தாந்த ரீதியாகப் பெண் உரிமைகளும் சமத்துவமும் சமூகத்தில் வேரூன்றாத காரணத்தால்தான் இன்றளவும் அரசியல் மேடைகளில் பெண்களையும், பெண் என்பதாலேயே எதிர்க்கட்சி வேட்பாளர்களையும் இழிவுபடுத்திப் பேசும் இழிநிலையும் தொடர்கிறது.

ஊடகங்களும் கவன ஈர்ப்புக்காக 'டோக்கனிசம்' முறையில் பெண் அரசியல்வாதிகள் மீது வெளிச்சம் குவிக்கின்றனவே ஒழிய. பொதுவான ஆணாதிக்கப் போக்குதான் அங்கும் நிலவுகிறது.

தொலைக்காட்சி அரசியல் விவாதங்களில் பங்குகொள்ளும் பெண்களை ஆண் பங்கேற்பாளர்கள் தகாத முறையில் பேசுவதும், நெறியாளர்கள் டி.ஆர்.பிக்காக அவர்களைப் பேச விட்டுப் பின்பு சப்பைக்கட்டாக மன்னிப்பு கேட்பதும் சகிக்க முடியாத நாடகங்களாக அரங்கேறுவதைக் காண முடிகிறது.

இவை எல்லாம் ஒருபக்கமிருக்க, இன்னும் குடும்ப அரசியலிலேயே அடிமைப்பட்டு தன் சொந்த வாழ்விலேயே எந்த முடிவுகளையும் சுயமாகச் சிந்தித்து எடுக்க முடியாத பெண்கள், அரசியலே பேசக் கூடாது என்பதுதான் அவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் ஆகப் பெரும் அரசியல். அது மிகவும் நுட்பமான பெண் வெறுப்பு.

சமூக வலைதளங்களில் பெண்கள் பெருவாரியாகப் பேசவும் விவாதிக்கவும் தொடங்கிவிட்ட பிறகு இந்தப் போக்கு குறைந்திருக்கிறது என்றாலும், இன்றும் உறவுகளை ப்ளாக் செய்து விட்டுத்தான் பெண்கள் சமூக வலைதளங்களில் பண்பாட்டு சமூக அரசியலைக்கூடப் பேச முடிகிறது (பகுத்தறிவு, பெண்ணியம்). பள்ளி, கல்லூரி மற்றும் குடும்ப வட்ஸப் குழுமங்களோ கேடுகெட்ட ஆணாதிக்க மனப்பான்மைக்கும் கெட்டி தட்டிப் போன சாதியத்துக்கும் கட்டியம் கூறி நிற்கின்றன. புடவை கட்டிப் பூவைத்து ஒரு படம் பகிர்ந்தால் ஹார்ட்டின்கள் பறக்கும். ஆனால், ஏதேனும் காட்டமான அரசியல் விமர்சனத்தையோ கருத்தையோ ஒரு பெண் முன்வைத்தால் ஆண்கள் கூடிப் பகடி செய்வதும் மற்ற பெண்கள் தனிப்பட்ட முறையில் ஆமோதித்தாலும்கூட பொதுவில் கள்ள மௌனம் சாதிப்பதும் வாடிக்கையாகவே தொடர்கிறது.

பெண்கள் அச்சமின்றி ஒன்று கூடி அரசியல் பேசும் களங்களை உருவாக்கும் முனைப்புடன் பல தோழர்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

சமீபத்தில் ஆவணப்பட இயக்குனர் கீதா இளங்கோவன் தலைமையில் தொடங்கப்பட்ட 'சாவித்ரிபாய் பூலே' பெண்கள் பயணக் குழுவும், எழுத்தாளர் சாலை செல்வம் தலைமையிலான 'கூடு' பெண்கள் குழுவும் 'சமத்துவப்பறவைகள்' பெண்கள் குழுவும் இணைந்து பெரியார், அம்பேத்கர் பிறந்த நாட்களுக்கு ஏற்பாடு செய்த கலந்துரையாடல்களில் எந்த அரசியல் பின்புலமும் இல்லாத பெண்களும் குழந்தைகளும் பெரியாரையும் அம்பேத்கரையும் வாசித்து உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

சமூகநீதிக்காகவும் பாலின சமத்துவத்துக்காகவும் போராடிய அம்பேத்கர் பெரியார் வழியில் பெண்கள் அரசியல்படுவது ஒன்றுதான் பெண்கள் அரசியலில் வலிமையான இடங்களுக்கு முன்னேறுவதற்கும், ஒட்டுமொத்த பெண்களுக்கான விடிவு ஏற்படுவதற்கும் ஒரே வழி.

நிற்க்

'ஆசையா தான் இருக்கு, புத்தகம் வாசிக்க, கூட்டத்தில் கலந்து கொள்ள. எங்கே? வீட்ல வேலையே சரியா இருக்கு' என்று குரல்கள் கேட்கின்றன அல்லவா?

"நச்சரிக்கும் வீட்டுவேலைகளில் இருந்து பெண்கள் விடுதலை பெறாமல் மனித குலத்துக்கு விடுதலை இல்லை" என்று பெருந்தலைவர் லெனினின் குரலும் உடனே கேட்க வேண்டும்!

முதலில் வீடும் சமையலறையும் நாம் இல்லாவிட்டால் இடிந்து வீழ்ந்து விடும் என்ற நினைப்பைப் புறந்தள்ளி ஒரு டீக்கடைக்கு நான்கு பெண்கள் சேர்ந்து போய் தயக்கமின்றி டீ குடிக்கத் தொடங்குவோம்.

காட்டு விலங்குகளுக்கு அஞ்சியதைவிடவும் அதிகமாக சகமனிதர்களான ஆண்களுக்கு அஞ்சுவதை விடுத்து, 'இதுவும் எங்க ஏரியாதான், கொஞ்சம் தள்ளிக்கோ!' என்று ஆண்களே வியாபித்திருக்கும் புறவெளிகளில் பெண்கள் தயக்கமின்றிப் புழங்கத் தொடங்கி விட்டாலே போதும் அரசியலையும் அராத்தாய்ப் பழக ஆரம்பித்து விடுவோம்.

# கனடாவில் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளான விமானம்




## 18 பேர் காயம்

டொராண்டோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று பிற்பகல் டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளா-கியுள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 18 பேர் காயமடைந்துள்ளதாக கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மினியாபோலிஸிலிருந்து வந்த டெல்டா ஏர் லைன்ஸ் விமானம் டொராண்டோ நேரப்படி பிற்பகல் 2:30 மணியளவில் விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது.

இதன் விளைவாக அவசரகால பணியாளர்களின் மீட்பு பணிகளுக்காக பல மணி நேரம் விமான நிலையம் மூடப்பட்டது.

விபத்தின் பின்னர் விமான நிறுவனம் தனது இணையதளத்தில் மாலை 5:42 மணிக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் துரதிர்ஷ்வசமான சம்பவத்தினால் 18 பேர் காயமடைந்தனர் என்று குறிப்பிட்டது.

எனினும், மாலை 07.00 மணியளவில் பியர்சன் விமான நிலையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 17 என்று கூறினார்.

விமானத்தில் நான்கு பணியாளர்கள் மற்றும் 76 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் 22 கனேடியர்கள், ஏனையவர்கள் பன்னாட்டுப் பயணிகள் என்றும் விமானநிலையத்தின்தலைமை நிர்வாக அதிகாரி டெபோரா பிளின்ட் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

மேலும், விபத்தில் காயமடைந்த பயணிகள் அனைவரும் உள்ளூர் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் உறுதிபடுத்தினார்.

விபத்தின் பின்னர் நேற்று விமான நிலையத்திலிருந்து புறப்படும் பெரும்பாலான விமானங்கள் தாமதமாக அல்லது இரத்து செய்யப்பட்டன.

புறப்பாடும் வருகையும் மாலை 5 மணிக்குப் பின்னர் மீண்டும் வழமைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் விமான நிலையம் தெரிவித்துள்ளது.

டெல்டா ஏர்லைன்ஸின் 4819 விமானம், வார இறுதியில் டொராண்டோ பகுதியைத் தாக்கிய குளிர்காலப் புயலைத் தொடர்ந்து வீசும் பனிக்கு மத்தியில் மினியாபோலிஸிலிருந்து வந்தது.

இந்த விமானத்தை அதன் துணை நிறுவனமான எண்டெவர் ஏர் இயக்குவதாக டெல்டா தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து உடனடி தகவல் இல்லை.

கனடா போக்குவரத்து ஆணையகம், இது குறித்த விசாரணைகளை தற்சமயம் ஆரம்பித்துள்ளது.

விசாரணைக்காக இரண்டு ஓடுபாதைகள் மூடப்பட்டிருக்கும் என்றும், விமான நிலையம்வழியாக பயணிக்கும்எவருக்கும் வரும்நாட்களில் தாமதம் ஏற்படும் என்றும் பிளின்ட் மேலும் கூறினார்.

# அணு ஆயுத திட்ட பணியாளர்களை மீண்டும் பணியமர்த்த அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு!



பணியில் இருந்து நீக்கிய நூற்றுக்கணக்கான அமெரிக்க அணு ஆயுதத் திட்டப் பணியாளர்களை, மீண்டும் பணியமர்த்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாகக் கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில் அரசின் செலவினத்தை குறைக்கும் வகையில் அண்மையில் நூற்றுக்கணக்கான அமெரிக்க அணு ஆயுத திட்டப் பணியாளர்களை திடீரென கடந்த வாரம் பணியில் இருந்து நீக்கி ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

இவ்வாறு பணியிலிருந்து நிறுத்தப்பட்டோரில், 30 சதவீதத்திற்கும் அதிகமானோர், டெக்சாஸ் மாகாணத்தின் அமரில்லோ நகருக்கு அருகில் உள்ள, 'பான்டெக்ஸ் பிளான்ட்' என்ற பெடரல் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பணியிலிருந்து திடீரென நிறுத்தப்பட்ட பலர், அணு ஆயுதத் திட்டத்தில் முக்கிய பொறுப்புகளில் உள்ளவர்கள் என்பதால் அமெரிக்காவின் அணு ஆயுதத் திட்டங்கள் குறித்த கேள்வி எழுந்துள்ளதோடு, எதிர்காலத்தில் அமெரிக்காவின் செயல்திட்டங்கள் குறித்த அச்சமும் எழுந்துள்ளது.

இந் நிலையில் அமெரிக்க ஜனாதிபதியின் கண்மூடித்தனமான செயல்பாட்டால் உள்நாட்டில் பல விதமான குழப்பங்கள் ஏற்படும் என பலதரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து, தன் முடிவை மாற்றியுள்ள ட்ரம்ப், பணியிலிருந்து நீக்கியவர்களை மீண்டும் பணியமர்த்த உத்தரவிட்டுள்ளார். குறித்த சம்பவம் உலகளவில் பெரும்பேசுபொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் வீடு வாங்க தடை



தனி கண்டமாகவும், தீவு நாடாக விளங்கும் அவுஸ்திரேலியாவில் அரசு சார்பில் வீடு கட்டி தரப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனைக்காக வழங்கப்படும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

வெளிநாட்டில் இருந்து புலம் பெயர்ந்தவர்களும், அயல்நாட்டு நிறுவனங்களும் அந்த திட்டத்தில் முதலீடு செய்து வீடுகளை வாங்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

சீனா, நெதர்லாந்து, அமெரிக்கா நாட்டை சேர்ந்தவர்கள் அவுஸ்திரேலியாவில் வீடுகளை வாங்கி குவித்து வந்தனர். இந்தநிலையில் அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் வீடு வாங்குவதற்கு அரசாங்கம் தற்காலிக தடை விதித்துள்ளது.

உள்நாட்டு மக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கத்தில் வருகிற 2027ஆம் ஆண்டு வரை 2 ஆண்டுகளுக்கு இந்த தடை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வங்காளதேசத்துக்கு நிச்சயம் திரும்புவேன்

## ஷேக் ஹசீனா தெரிவிப்பு

வங்காளதேசத்தில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த மாணவர்கள் போராட்டத்தால் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார்.

இதையடுத்து முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என வங்காளதேச அரசு கோரிக்கை விடுத்து வருகிறது.

இந்தநிலையில் அவாமி லீக் கட்சியின் (ஷேக் ஹசீனா கட்சி) ஐரோப்பா பிரிவு ஏற்பாடு செய்த காணொலி நிகழ்ச்சியில் ஷேக் ஹசீனா பங்கேற்று பேசினார். இதில் வன்முறையில் கொல்லப்பட்ட பொலிஸ்காரர்களின் குடும்பத்தினருடன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

நான் வங்காளதேசத்துக்கு நிச்சயம் திரும்பி வருவேன். நீங்கள் அனைவரும் பொறுமை காத்து ஒற்றுமையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பொலிஸ் அதிகாரிகளின் மரணங்களுக்குப் பழிவாங்குவேன். அவர்கள் அரசியல் வன்முறைக்கு பலியான தியாகிகள். நான் முன்பு செய்தது போல் நீதி வழங்குவேன்.

என்னை கொலை செய்ய முயன்றனர். ஆனால் நான் உயிர் பிழைத்தேன். கடவுள் எனக்கு 2ஆவது வாழ்க்கையை அளித்துள்ளார். இது ஒரு காரணத்திற்காக நடந்தது என்று நான் நம்புகிறேன்.

முகமது யூனுசுக்கு அரசாங்கத்தை நடத்துவதில் எந்த அனுபவமும் இல்லை. அவர் அனைத்து விசாரணை குழுக்களையும் கலைத்து, மக்களைக் கொல்ல பயங்கரவாதிகளை கட்டவிழ்த்து விட்டார். அவர்கள் வங்காளதேசத்தை அழிக்கிறார்கள். பயங்கரவாதிகளின் இந்த அரசாங்கத்தை அகற்றுவோம்.

உயிரிழந்த அவாமி லீக் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உதவ ஒரு அறக்கட்டளையை அமைத்திருந்தேன். ஆனால் அதன் வங்கி கணக்குகள், அறக்கட்டளை மற்றும் எங்கள் சொத்துக்கள் அனைத்தும் இந்த அரசாங்கத்தால் முடக்கப்பட்டுள்ளன.

## பாணின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில் ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாவாலும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதியால் நேற்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்குப் பல்வேறு வகையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவான நிதியும் வடக்கு மாகாண சபைக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி தனது உரையில், வடக்கு அதிகாரிகள் கோரிய நிதியையே வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாகச் செலவு செய்யவேண்டும். எவ்வளவு விரைவாக அந்த நிதியை செலவு செய்து முடித்து மேலதிக நிதியை நாம் கோரவேண்டும். இது எமக்கு சவாலானதுதான்.

நாம் நிதியைத் திருப்பி அனுப்பாமலே நிதியை திருப்பி அனுப்பியதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில், பெருமளவு நிதி எமக்கு கிடைக்கப்பெறும் நிலையில் அதை உரிய முறையில் செலவு செய்யவேண்டும். எமது செயற்பாடுகளை ஊடகங்கள் உட்பட பல தரப்புக்களும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக் கின்றன. எனவே, வெளிப்படைத்தன்மையாக நிதியை விரைவாக செலவு செய்யவேண்டும். ஜனாதிபதியால் வீதி அபிவிருத்திக்காக விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கு சமமாகப் பகிரத் தேவையில்லை. தேவைப்பாடுகள் எங்கு அதிகமோ அங்கு அதிகளவு நிதியை ஒதுக்குங்கள்.

இந்தத் திட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு தெரிவுகளை முன்னெடுக்காமல் வன்னிப் பிராந்தியத்தின் ஒவ்வொரு இடத்துக்கும் சென்று நேரடியாகப் பார்த்து தெரிவு செய்யுங்கள். அப்போதுதான் அந்த மக்கள் அனுபவிக்கின்ற வலி உங்களுக்குத் தெரியும்.

எமக்கு இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தி முடிப்பது சவாலானதுதான். எங்களால் முடியும் என நினைத்துக்கொண்டு இதைச் செய்யுங்கள். இரவு, பகல் பாராமல் இதைச் செய்ய வேண்டும். நாங்கள் முன்மாதிரியானவர்கள் என்பதை செயலில் காட்டுங்கள்.

இந்தத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்போது ஊழல், இலஞ்சம் என்பன இருக்கக் கூடாது. எல்லாம் வெளிப்படைத்தன்மையாக நடைபெற வேண்டும். இந்த அரசின் கொள்கையும் அதுதான்." - என்றார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன்,

"அதிகாரிகளின் அர்ப்பணிப்பில்தான் இவற்றின் வெற்றி தங்கியிருக்கின்றது. எமது மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்படுத்தி முடிக்கவேண்டும்." - என்று வலியுறுத்தினார்.

## ஆறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது மேற்படி இருவரும் கிரானேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிரானேகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு வெளிநாட்டுத் துப்பாக்கியும், ஐந்து உள்நாட்டுத் துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 49 மற்றும் 51 வயதுடைய தேவ/ஹவ மற்றும் தம்புளுஹல்மில்லவெவ ஆகிய பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிரானேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரியாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நாமலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

கொழும்பு , பெப். 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, சர்ச்சைக்குரிய கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பான வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை இன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி அவர், 100,000 ரூபா ரொக்கம் மற்றும் தலா 10 மில்லியன் ரூபா சரீரப் பிணையில் விடுக்கப்பட்டார். இலங்கையில் ரக்பி விளையாட்டின் அபிவிருத்திக்காக இந்தியாவைத் தளமாகக் கொண்ட கிரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் மீள் விசாரணையை எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற மூவர் கைது

கொழும்பு , பெப். 18

கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள், அதிக அளவிலான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கடத்த முயன்ற ஒரு வெளிநாட்டவர் மற்றும் ஒரு பெண் உட்பட மூன்று நபர்களை கைது செய்துள்ளனர்.



கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் (NB) கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவு நடத்திய தனித்தனி சோதனைகளில் இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

பெப்ரவரி 17 ஆம் திகதி, டுபாயிலிருந்து வந்த 51 வயதுடைய இந்தியர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (டீஐஏ) வருகை முனையத்தில் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடம் சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 15,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் (75 அட்டைப்பெட்டிகள்) கைப்பற்றப்பட்டன.

இன்று (பெப்ரவரி 18) நடந்த மற்றொரு சுற்றிவளைப்பில், துபாயில் இருந்து கடத்தப்பட்ட 21,200 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் (106 அட்டைப்பெட்டிகள்) ரஸ்நாயக்கபுரவைச் சேர்ந்த 23 வயது நபர் பண்டாரநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் கைது செய்யப்பட்டார்.

அதே நாளில் நடத்தப்பட்ட ஒரு தனி சோதனையில், துபாயிலிருந்து 46,800 வெளிநாட்டு சிகரெட்டுகளை (234 அட்டைப்பெட்டிகள்) கடத்த முயன்றதற்காக பன்னிபிட்டியவைச் சேர்ந்த 48 வயது பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மூன்று வழக்குகள் குறித்தும் கட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.


பல்வேறு குழுக்களும் தேர்தலை ஒத்திவைக்கக் கோரியும் வருகின்றன, நாடாளுமன்ற நடைமுறை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். புதிதாக நாடாளுமன்றத்திற்கு வந்தவர்கள் இதனைப் பெரியதொரு விடயமாகப் பார்க்காமல் இருக்கலாம், நாடாளுமன்ற நடைமுறை தெரியாவிட்டால் புத்தகங்களைப் படித்துப் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் தேர்தல் அறிவிப்பை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

ஆளுந்தரப்பைச் சேர்ந்த தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவை தமது கைப்பாவையாகக் கருதுகின்றனர். தேர்தலை நடத்த வேண்டிய திகதிகள் மற்றும் வேட்புமனுக்களைக் கோரும் திகதிகளை அரசு தீர்மானிக்க முடியாது. ஆளுந்தரப்பினர் இவற்றைக் குழப்பிக்கொண்டுள்ளனர்." - என்றார்.

# ரிஷாத் எம்.பியின் தந்தை காலமானார்

புத்தளம், பெப். 18



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் தந்தை அல்ஹாஜ் பதியுதீன் தனது 78 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை இரவு காலமானார்.

மன்னார், உப்புக்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது புத்தளம், தில்லையடி அல் மினாபுரத்தில் வசித்து வருகின்றார்.

இவர் காலஞ்சென்ற அப்துல் றஹ்மான் மரியம் பீவியின் மகனும், ஹாஜியானி ஹலீமத் ஸகிய்யாவின் கணவரும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், ரியாஜ் பதியுதீன், பாரிஷா பர்வின், பஸ்மிலா பர்வின் காலஞ்சென்ற பைறூஸா பர்வின் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா இன்று செவ்வாய்க்கிழமை அஸர் தொழுகையை அடுத்து புத்தளம் ரத்மல்யாய அல் காசிமீ மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படுகின்றது.

# அரசின் உறுதிமொழிகள் வெறும் ஏட்டில் மாத்திரமே

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு. பெப். 18

அநுர அரசின் உறுதிமொழிகள் வெறும் ஏட்டில் மாத்திரமே காணப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் குறிப்பிடுகையில்,

"நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சுபீட்சமான காலப் பகுதியென்றால் அது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைத்தான் கூறமுடியும். பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனை யாரும் மறந்துவிட முடியாது. வரவு - செலவுத் திட்டத்தில் எம்மால் குறிப்பிடப்பட்ட அனைத்தையும் நாம் நிறைவேற்றினோம். ஆனால், அரசு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவ்வாறான நிலைமையில் வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை மாத்திரம் எவ்வாறு செயற்படுத்த முடியும்? அவை வெறும் ஏட்டில் மாத்திரமே காணப்படுகின்றன.

மக்களை ஏமாற்றி போலியான வாக்குறுதிகளை வழங்கினார்கள். தற்போது அவ்வாறான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதனை மக்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள்." - என்றார்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.02.2025 இல் வெளியிடப்பெற்றது.